# விடியலின் கீதம்



சோலையூர் கமலா

JPL
C3729

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்.

# விடியலின் கீதம்

நூலகப் பிரிவு
நகர நூலக சேவைகம்
யாழ்ப்பாணம்.
11 - 6 - 1995
யாழ்ப்பாணம்
KOHA
JPL

மீசாலையூர் கமலா

114607

மணிஓசை வெளியீடு - 6

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

○ நூல்: விடியலின் கீதம்
கவிதைத் தொகுதி

○ ஆசிரியர்: மீசாலையூர் கமலா.

○ முதல்பதிப்பு: பெப்ரவரி - 1995

○ வெளியீடு: மணி ஓசை வெளியீட்டகம்
12. சென் பற்றிக்ஸ் வீதி
யாழ்ப்பாணம்

○ விலை: 30/-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேசிய நூலகப் பிரிவு
மாநகர நூலக சேவை
யாழ்ப்பாணம்

இதோ, கன்னி முயற்சியாய் வா
கவிதைத் தொகுதி ஒன்று! ழ்
இனிய நறும் நீரோடை! த்
வெண்கமலம் முகம் மலர்ந்து து
முறுவலித்து முகிழ்ப்ப விழ்த்து, க
பொன் சிரிப்புப் பூத்துப், ள்
புனித
வாசம் கமழ்ந் தீர்ப்ப
புதுத் தேன் வழங்குது.

**தா. இராமலிங்கம்**

JPL

---

குளிரும் பனியும் குடலை வருத்தி
மார்புச் சளி முட்டவும்
அலட்சியம் செய்து
அதிகாலையில் எழுந்தே
★ ஆலயங்கள் தோறும் சப்பணமிட்டு
பயன் சொல்லிப்பண் இசைத்து
ச கலகல வென்று கருத்து மிக்க
ம உரைகளால் சபைகளில்
ர் சிறக்கப் பெற்று
ப் நிலவுலகில் பலநூறு
ப இதயங்களில் இப்போதும்
ண இருந்து கொண்டே!
ம் பெறற்கரிய பேறான - - - - - -
ஏகாதசி பெருநாளில் இறைவனால்
★ வைகுண்டத்துக்கு
அழைக்கப் பெற்று
அங்கு வாழும் என் பேரர்
விநாசித்தம்பி அவர்கட்கே!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நூன்முகம்

மீசாலையூர் கமலாவின் "விடியலின் கீதம்" என்ற கவிதைத் தொகுதியைப் படித்துப் பார்த்தேன்.

இன ஒடுக்கு முறைக்கெதிராகவும் பெண்ணடிமைக்கு எதிராகவும் இந்த இளங்கவிஞர் எழுதிவருவது தெரிகிறது.

தமிழ் மக்கள் மீது போர் விதித்துள்ள சுமைகள், அழிவுகள், இழப்புக்கள் பற்றியெல்லாம் இவர் கவிதை சொல்லுகிறது. யுத்த தருமத்தைப் பற்றி யாரும் அலட்டிக்கொள்வதில்லை.

"அன்றைய போரில்
ஆயுதங்களோடு
குறித்த இடத்தில்
குடிமக்களுக்கு
எதுவித இன்னலுமின்றி...
இன்றோ
அத்தனை இடத்திலும்
அநீதிப்போர்..."

கிளாலிப் பயணத்தின் அவலங்களைக் கட்புலக் படிமமாகத் தருகிறார் கமலா:

"கடலலையில் மனித ஜீவன்
கதறும் ஒலிகளெல்லாம்
காற்றில் கலந்து தேய்ந்து
கரையொதுங்குவது சடலம்"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேசிய நூலகப் பிரிவு
மாநகர நூலக சேவை

பெண் — எமது கவிஞர்களின் கற்பனைக்கு ஊற்று, வீட்டுக்கு லட்சுமி, ஆனால் சமுதாயத் தராசில சந்தைப் பொருள்! மங்கையராகப் பிறப்பதற்கு மாதவம் செய்திட வேண்டும் என்றார் கவிமணி. ஆனால்,

''மணமேடையேறுவதற்கும்
மங்கையர் மாதவம் செய்கின்றனர்''

என்கிறார் கமலா

சீதனக் கொடுமைக்கு ஆண்களையே குறை கூறுவது வழக்கம். இக்கவிஞர் அதை அனுசரித்துப் போகும் பெண்களையும் கண்டிக்கிறார்.

''...திருமணச் சபையேற
நீவிர் பெற்றோரைச் சக்கை பிழிய
வேண்டுமா?''

இவைதவிர நவராத்திரி, புத்தாண்டு, திலீபன் நினைவு முதலியவற்றுக்கென எழுதிய கவிதைகளும் இத்தொகுதியில் உள.

பெரும்பாலான கவிதைகள் கோஷங்களாக இருப்பதைச் சுட்டிக்காட்ட வேண்டும். ஆரம்ப எழுத்தாளர்களால் இதைத் தவிர்க்க முடியாதிருக்கலாம். ஆனால் கமலாவின் கவிதைகள் கலையாக்கத்தை நோக்கி நகர வேண்டும்.

கவிஞர் சோ. பத்மநாதன்
உப அதிபர், ப்லாலி ஆசிரிய
கலாசாலை

திருநெல்வேலி
24 - 10 - 03

KOHA
JPL

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பதிப்புரை

எண்ணக் குவியல்களை
எழுத்திலே வடிக்கும்
கன்னிப் பெண்ணிவள்
கற்பனையில் மலர்ந்ததே - இந்த
விடியலின் கீதம்.

காலத்தின் கதை சொல்லும்
கானத்தைக் கேட்டு
கவிபாடும் கன்னியிவள்
எண்ணச் சிறகுகள்
உதிக்கும் சூரியனின்,
உயிர் நாதமாக, ஒலிக்கும்
செய்திகள் பல ......

ஏக்கங்கள், எதிர்பார்ப்புகள்,
எதிர் கொண்ட சோகச் சுவடுகளை
பதிக்கும் இவள் படைப்புக்கு,
பல களங்கள் பக்க பலமாய் இருந்தன

எழுத்துப் பட்டறையில்,
புற நிலைக் கற்கை நெறியில்
கருத்தரங்குகளில் கற்றவை துணைநிற்க
பெற்றதை மற்றவருக்கு
பகிரும் துணிச்சலில்

உதிரிப் பூக்களை மாலையாக்கி
மண்ணின் கதை சொல்லும்
விடியலின்கீதமாய் இசைக்கும்
சோலையூர் கமலாவின்
கீதத்தை வெளியிடுவதில்
மணி ஓசை வெளியீட்டகம்
மகிழ்ச்சி கொள்கிறது.

ஜோசப்பாலா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்.
தமிழ் நூலகப் பிரிவு
நகர நூலக சேவை
யாழ்ப்பாணம்

## வாசலில்!

வாசலில் வைத்து மொழிகின்றேன்
கேட்டுவிட்டு நுழையுங்கள்
மற்றவரின் துயரம் கண்டு
மனது பொங்கியது
பொங்கியவை "பா" ஆகின
ஆகியவற்றை உங்களின்
கரங்களை வந்தடைய
பத்திரிகைகளுக்கும் சஞ்சிகைகளுக்கும்
அனுப்பி வைத்தேன்.
அவற்றில் அவை பதிவாகி-----!
வெளி வந்த கவிதைகள்
ஒருமித்து அரங்கேறி
உங்கள் கரங்களால் ஏற்கப்படுகின்றன
இவை உள்ளங்களை சிந்திக்க வைக்குமென
நம்பி நிற்கின்றேன்
ஏனென்றால் இவ்வெழுத்துக்குரியவளை
அடையாளம் கண்டு பாராட்டியவர்கள்,
மௌனமாகவே வாழ்த்தியவர்கள்
வாய் விட்டே வாழ்த்திய பெரியோரென

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என் வளர்ச்சிக்குக் காரணமாகிய
பல பெரியோருளர்.
என் கவிதைகள் அச்சாக...
ஆற்றலையளித்த இறைவனைப்
போற்றித் துதிக்கின்றேன்.
சிபார்சுகளெதுவுமின்றி முகமேயறியாது
என் எழுத்துக்களைப் பார்த்தே
பத்திரிகைகளும், சஞ்சிகைகளும்
நான் நேசிக்கும் இலக்கிய உலகில்
என்னை இருத்தி வைத்தன.
அவற்றிற்கு "நன்றி" சொல்ல
வார்த்தைகளைக் தேடி...
தத்தளித்து நிற்கின்றேன்.
இக்கவிதைத் தொகுப்பிற்கு
ஆசிகூறி, "நூன்முகம்" தந்த
முத்த கவிஞர் சோ. பா. அவர்கட்கும்
ஓவியம் தந்து அழகுபடுத்தியவர்கும்
வெளியிட்டு வைத்த மணியோசை
பதிப்பகத்தினற்கும்
எனதன்பு வாசக நெஞ்சங்கட்கும்
மனமார்ந்த நன்றிகள்
என் பெருமதிப்புக்குரியவர்ளே!
மண்ணோடும் மக்களோடும்
மனதில் குடியிருக்கும் தெய்வங்களுடனும்
இசைபாடி நிற்கிறேன்.
என் கவிதைகள்
தவறுகள் ஏதாயினுமிருந்தால்
சுட்டிக்காட்டுங்கள்; என் வளர்ச்சிக்கு
அவை ஏணிப் படிகளாகட்டுமென்று கூறி
விலகி நிற்கிறேன்; நுழையுங்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாநகர நூலக சேவை

# காத்தருள் கந்தா!

கலியுகத் தலைவன் நீ
கருணைக் கடலும் நீ
அழகுத் தெய்வம் நீ
அருள் வள்ளலும் நீ
இன்னருள் தருவாய் நீ
இளையவனும் நீ
எல்லோர் மனதிலும் நீ
இடம் பெற்றுவிட்டாய்
நாவலர் தமிழ் வளர்த்த
நல்லை நகர் தனில்
பவனி வரும் பாலகனே
தொல்லையெலாம் நீக்கி
காத்தருள் கந்தா!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வல்லமை தந்திடு!

தியாகம் நிலைத்துவிட்ட வீதியில்
தேரேறி வரும் குமரா
அக்கிரமத்தை அழிக்க
அன்று வேலோடு சென்று
வீழ்த்தினாய் அரக்கர்களை!
விலங்குடைக்க நாமின்று
கருவிகளேந்திக் கொண்டு
குருதியோடும் மண்ணிலிருந்து
தேரேறி வருமுனக்கு
தோத்திரங்களிசைத்து
அருள்வேண்டிநிற்கிறோம்
மண்ணிலே வாழ விடு
மண்ணை மீட்க வல்லமை
தந்திடு; தேரேறிவரும்குமரா!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்ப்பாணம்.

# கை கொடுப்பாயா?

சித்திரை அணங்கே
செந் நிலமிது
தமிழ் மண்ணின்
கோலமிது
போரின் அழிவைப்
பார்த்து வா
வீதிகளில்
வீழுந்து விடாதே
குண்டுகள் தோண்டிய
கிடங்குகளிருக்கு
கற்களும் தடக்கும்
கவனித்து வா
கடலன்னை
கத்துகிறாள்
அருமை மக்களை
இழந்ததனால்!
அவளைத் தேற்றி
எம்மிடம் வா
சித்திரை மாதத்து
ஸ்ரீ முக அணங்கே
பட்சணமின்றி
புத்தாடையின்றி
பரணிப் பாடலோடு
வஞ்சியே!
வரவேற்கின்றோம்.

மீசாலையூர் கமலா 14 - 04 - 1993 உதயன்

# பார்! திலீபா பார்!

மருத்துவ பீடம் காத்திருக்க
மக்களைக் காக்கவென
போர்க் கோலம் கொண்ட
பார்த்தீபா பாரிங்கு
இல்லைத் ... திலீபா
உன் தேசத்தைப் பார்.
வெற்றிப் பெருமிதத்தோடுனிற்கும்
உன் தோழரைப் பார்
நெஞ்சம் நிமிர நடக்கும்
உன் மக்களைப் பார்
எல்லைகளிலுள்ள
எதிரியின் அரண்களிலெல்லாம்
ஏறி மிதித்துவிட்டு
நிமிர்ந்து நிற்கிறோம்
உப்பு நீருக்குள் - எங்கள்
உதிரத்தை
சேர்த்தவர்களைச்
சாய்த்துக் கொண்டே
நிமிர்ந்து நிற்கிறோம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்.

வெற்றிக் குவியல்களைக் கண்டு
நீயும் மில்லரும் கூட
வியப்பது தெரிகிறது
சகோதரா! இவை மட்டுமா?
சுய பொருளாதாரத்தின்
ஏற்றம் கண்டும்தான்
உள்ளூர் மூல வளங்களால்
உயர்ந்து நிற்கும் தொழிற்சாலைகள்
கண்டு களிப்புறுவது தெரிகிறது
காவற்துறையோடு
நீதி நிர்வாகமும்
சீருற்று நிற்பது கண்டு - உனது
சிந்தை நிறைவது தெரிகிறது
கல்வியின் கனதி கண்டு
கலைகளின ஏற்றம் கண்டு
இறுமாந்து நிற்பதும் தெரிகிறது
ஆம்! திலீபா
தமிழீழத் தலைவன்
காத்திரமான அரசுக்குரிய
கடப்பாடுகளெல்லாவற்றையும்
கவனித்துக் கொண்டிருக்கிறான்
சட்டபூர்வமுள்ள ஈழம்
சடுதியென்று ... வரும்
விண்ணிலிருந்து தோழரோடு
பார்ப்பேனென்றாயே
பார்த்துக் கொள்.

37290



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விலங்கொடிப்பாள்.

அடக்கத்தின் அணிகலன் பெண்ணாம்;
அதனால் அடங்கிக் கிடந்தாள்
அடங்கிக் கிடந்தவளை அருட்டிவிட்டார்;
அடிமைத் தனத்தை திணித்ததால்
அருண்டெழுந்தவளை அடங்காப்பிடாரி
யென்றார்
அவளின் திறமையை ஜீரணிக்க முடியாததால்
படிப்பென்ன பட்டம் பதவியென்ன
எல்லாவற்றையுமே எடுத்துவிட்டாள்
தன் திறமையினால்!
பெண்விடுதலையெனப் போர்க்கொடியுயர்த்
தும் வேளையில்
வந்ததாம் தாய் மண்ணுக்குக் கேடு
நித்தம் பொம்மர், கெலி, ஷெல்லால்
வந்ததே அவனினத்துக்குச் சாவு
அகப்பையேந்தி பேனா பிடித்த கைகளால்
தன்னினத்தின் விலங்கொடிப்பாள் - இன்று
சங்க கால தாயை விஞ்சுகிறாள் ●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமுதாயம் தரும் பட்டங்கள்

விஷேசங்களுக்கு விலக்கப்பட்டு
நெற்றியில் திலகமிழந்து
வெள்ளைப் புடவையுடுத்தி
வெளியிடங்களுக்குச் செல்லாது
வீட்டுக்குள் அடக்கமாக
வாழ்க்கையை வீணடித்து
வாழ வேண்டிய பொம்மையாம்
இவற்றை மீறியவள்
இகத்திலே செயற்பட்டால்
கணவனையிழந்தவள்
கட்டுக்கடங்காது காரியமாற்றுகிறாள்!
அடககமின்றித் திரிந்து
அநாச்சாரம் புரிகின்றாளென
அவனியிலுள்ளோர் அங்கலாய்த்து
அடங்காப் பிடாரியென்று
பல பட்டங்கள் சூட்ட
பரிதவிக்கும் விதவையவள்
உள்ளத்தில் ஒளியிழந்து
உலகத்தின் வசை கேட்டு
வயது பதினாறில் கணவனையிழந்தாலும்
வையகத்தில் பொம்மையாக
வாழ வேண்டியுள்ளாள்.

114607
37802



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிம்மதி பிறக்க நீயருள்வாயா?

உண்வை மறந்து
உயிரைக் காக்க
"பங்கரில்" வாழ்ந்து
பாசங்களை இழந்து
துயரிலமிழ்ந்து
துயிலைத் துறந்து
வீடுகளும் நொருங்க
வீதிகளி லலைந்து
சோகங்களைச் சுமந்து
சிந்தை கலங்கி
வேதனையிலவிந்து
வெந்துவிட்டோம்
பிரஜோற்பதியன்னையே
நாம் பட்ட துன்பங்கள்
போதுமம்மா - எமது
கண்ணீர் துடைத்துக்
காப்பாயா
நிம்மதி பிறக்க
நீயருள்வாயா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குணத்தை மட்டும் கொள்வீரா?

பெண்கள் அந்தஸ்த்துடனும்
பெரும் அழகுடனும் வாழ்க்கைத் துணை
தேடுகிறார்களாம் - சொல்லும்
சோதரரே! சோதனை மிக்க பெண்ணின்
வாழ்வில்

ஒற்றைக் காலில் நின்று
ஒரு இலட்சம் சீதனம் கேட்டது
மடந்தையரா? இல்லவேயில்லை
மாப்பிள்ளையென்ற பெயருக்குரியவரே
பொறுமையின் பொக்கிஷங்கள்
பொறுப்புள்ள சோதரிகள்
பண்புள்ளவரைத்தான் - தேடிப்
பார்த்தெடுப்பர் - அவர்கள்
மண்ணின்மீது அபிமானங்கொண்ட
மாப்பிள்ளையென்றாலென்ன
எக்கவுண்டன் டொக்டரென
எவரையென்றாலுந்தான்!
படிப்புக்கு பட்டத்துக்கென
பார்த்துப் பார்த்துக் கணக்குப் போட்டு
மொத்தமாகக் கேட்பது - உம்
பெற்றோரோ நீவிரோ தெரியவில்லை
வாய்ச் சொல்லாலடிககும சோதரரே!
வனிதை யொருத்தி உங்களுக்கு
சீதனமின்றி வந்தால் - அவளைச்
சீறிப் பாயாது சிறப்பாக
வைத்திருப்பீரா? ●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மகிழ்ச்சியுற்றிட...!

அன்புச் செடியை அவனியில் படரவிட
அன்பு மலர் அவனியில் மலர்ந்தீடும்
மலர்ந்த மலர் மணம் வீசிட
பரந்த உள்ளம் மனிதனிடம் வேண்டும்
உள்ளம் உயர்வுற்றிருந்தால்
கள்ளமெல்லாம் மறைந்துவிடும்
மறைந்துவிட்டால் மனிதரிடையே
கறைகள் தொலைந்து களிப்புப்பெருகும்
பெருகும் களிப்பால் அறிவு சிறக்கும்
அறிவு சிறப்புற்றால் ஆற்றல் பெருகும்
ஆற்றல் பெருக அவனி சிறக்கும்
சிறக்கும் அவனியை தருகின்ற செடியை
மறக்காது பெருக்கி மகிழ்ச்சியுற்றிடுவீர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈழ மண்! இசைத்துக் கொண்டேயிருக்கும்

ஈழ நிலமெங்கும்
இணையற்ற வீரம்
சங்க கால தாயைவிட
தமிழீழத் தாய்க்குலம்
பெருமை கொண்டுநிற்க
பாரத தேசமோ...
பதை பதைத்தது
மைந்தரின் வீர வீச்சால்
மனம் குழம்பி நின்றது
அரிசிப் பொதி போட்டு
அரவணைப்போமென்றவர்
ஒப்பந்த ஓலையை
எழுதி முடித்தனர்
ஆயுதங்களும் கொஞ்சமல்ல
அள்ளித்தான் கொடுக்கப்பட்டது
ஈழத்தவர் நெஞ்சுரம்
எங்கேயவர்களுக்குத்
தெரியப் போகின்றது
அன்னை மண் காக்க
ஆயுதங்களின்றியே
போராடுவாரென்பது
தங்கள் நாட்டவர்கள்போல்
அரிசிப் பொதியென்றவுடன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உரிமைகளைத் துறப்போமென்று
தப்புக் கணக்கிட்டனரோ?
மால் மருகன் வீதியில்
திலீபன் தொடக்கி வைக்க
மாமாங்க வீதியில்
நீயிருந்தாயம்மா!
அமைதிப் படையாக வந்து
அவலங்களைத் தந்து
ஆயுதப் போரிலும்
அகிம்சைப் போரிலும்
தலை குனிந்து தேசத்தை விட்டு
சென்று விட்டார்
தேசத்திலோ...
தொடருது தொல்லைகள்
பட்டினி போட்டு
பாதைகளில் மறித்து
செவ்வாறு பெருக்கெடுத்தோட
வயது வேறுபாடின்றி
வஞ்சியரும் வயோதிபரும்
மழலையரும் மைந்தரும்
மண் காக்க கருவிகளேந்தி
நிற்கின்ற காட்சியைப்
பார்த்தாயா?
தேசத்துக்காய் - நின்னைத்
தியாகம் செய்த தாயே!
ஈழ மண்! உன் புகழை
என்றும் இசைத்துக்
கொண்டேயிருக்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேசிய நூலகப் பிரிவு
மாநகர நூலக சேவை
யாழ்ப்பாணம்

# எத்தனை விதமான இழப்புக்கள் இறைவா!

இந்த மண்ணில்
உரிமைகளோடு - நாம்
வாழ விரும்பியதால்
அத்தனை...
அத்தியாவசிய பொருட்களும்
தடுக்கப்பட்டிருப்பினும்
நாம் கலங்கிடவில்லை
எழுந்து நிற்கிறோம்
ஆனாலோ...
இந்த மருந்துத் தடைதான்
மக்களை மழலைகளை
விழுங்குவதை நினைந்து
நெஞ்சம் கொதிக்கிறது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வந்ததே...
இந்த செப் டிசீமியா!
குண்டு இராட்சதரோடு
குருதி அழுகல் நோயும்
தமிழினத்தைக் குடிக்கிறது
அன்று பாரதப் போர்
இன்று ஈழப் போர்
அன்றைய போரில்;
ஆயுதங்களோடு
குறித்த இடத்தில்
குடி மக்களுக்கு
எதுவித இன்னலுமின்றி!
இன்றைய போரிலோ
அத்தியாவசிய...
பொருட்களைத் தடுத்து
அத்தனை இடத்திலும்
அநீதிப் போர்
எத்தனை விதமாய்
இழப்புககள! இறைவா
இதயமுருக எடுத்த
எமது இனத்தை...
நோயின்றி உரிமைகளோடு
வாழ வைக்க வேண்டும்!
சுதந்திரக் குடிகளாக
வாழ வைக்க வேண்டும் ●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பரிதாபம்

நீரில் மீன்கள் பயணம்
நிஜ மகிழ்ச்சியோடு
நீரலையில் மனித பயணம்
நீமிட அவஸ்தையோடு.

தங்கமெலாம் விற்று
தனயர்களை இழந்து
தோட்டமெலலாமிழந்து
தோணியில் பயணம்

படகோட்டியை இரந்து
பணமெல்லாம் கொடுத்து
பதறித் துடித்துச் செல்வர்
பாதி வழியிலும் நிற்பர்.

கடற்படை கண்டால்
கதையை முடித்து வைக்கும்
விமானப் படையும் வெருட்டும்
விதியையும முடித்து வைக்கும்.

கடலலையில் மனித ஜீவன்
கதறும் ஒலிகளெல்லாம்
காற்றில் கலந்து தேய்ந்து
கரையொதுங்குவது சடலம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இளைய தலைமுறை!

குட்டக் குட்டக்
குனிந்த தலைவர்களல்ல
இவர்கள்...
கிட்ட நின்று,
திட்டமாய்ப்
பதில் சொல்லும்
புதிய தலைமுறை!

ஆளும் போதையால
உளறுபவர்க்கு,
கிட்ட நின்றுகொண்டு
"எட்டச் செல்" லென்று
'கொடுத்து' நிற்கிறது.
இளைய தலைமுறை!

வருகின்ற தலைமுறை
வளமாய் வாழ்ந்திட
துயரக் கடலைக்
கடக்கிறது இந்த
இளைய தலைமுறை!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வானமே! நீயேன் அழுதாய்.

வானமே. நீயேன் அழுதாய்
வாயுவே நீயேன் எழுந்தாய்
பருவ மழையென்ற பெயரில்
படாத பாடு! படுத்திவிட்டாய்
வீதிகளில் நீந்த வைத்தாய்
வீடுகளுக்குள்ளும் வந்து நின்றாய்
அலுவலகங்களை ஆட்டி வைத்தாய்
ஆஸ்பத்திரிகளுள்ளும் புகுந்து நின்றாய்
குளங்கள் நிறைந்து வழிய
குடிசைகளைக் கரைத்து விட்டாய்
வானமே, நீயேன் அழுதாய்
வாயுவே, நீயேன் எழுந்தாய்
உடலை இயந்திரமாக்கி
எம் மண்ணை வளம்படுத்தினோம்
பசுமை கொழிக்க வைத்து
பட்டினியின்றி வாழ்ந்தோம்
மழையாய்ப் பொழிந்து அழித்தாய்
மரங்களைச் சாய்த்து விட்டாய்
ஆரியகுளமென்ன இரணைமடுவையே
ஏங்கிட வைத்துவிட்டாய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சீதன அரக்கனைச் சிதைத்திடுவோம்!

களத்திலே காவியம் படைக்கும்
காவிய மங்கையர் மண்ணில்தான்
கண்ணீர் சிந்த வைக்கும்
கொடும் சீதன அரக்கன்
தலை விரித்தாடுகின்றான்
மட்டற்ற சாதனைகள் புரிந்து
மாற்றானையும் தீகைக்க வைக்கும் - நீ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குடும்ப வாழ்வுக்கு மட்டும்
குவியலாகக் கேட்பதேனோ ?
கேள்விகளை உயர்த்தி - நீ
கேலிக்குரியவனாவதேனோ ?
வீரம் விளைந்த மண்ணில்
வீதி வீதியாகக் காதலும்...!
வண்ண மலர்களைச் சுற்றி
வண்டுகள் வருவது போல்
மங்கையரோடு உலாவும் - நீவிர்
மணமேடையை ஞாபகப்படுத்த
மாதாவில் பாரத்தைப் போட்டு
மௌனமாகிவிடுவதேனோ ?
சமுதாயச் சீர்கேட்டால் சிக்கி
சிந்தை கலங்குகிறீரோ ?
சீர் பெற்றுச் சென்றால்த்தான்
சிறப்பென்று எண்ணுகிறீரோ ?
ஆற்றல்களை மலிவித்த மண்ணின்
அறிவு மிகு மைந்தர்களே!
எம்மிடையே புரையோடிவிட்ட
இந்த சீதன அரக்கனைப்
பிறந்த மண் மீட்புக்காய்
போர்க் கோலம் கொண்டதுபோல்
ஈழத்து மண்ணைத் தலைகுனிவாக்கும்
இந்த சீதன அரக்கனையும் நேர்ந்தே
சிதைத்திடுவோம்! வாருங்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விடிவுக்கு வழி சமைப்போம்.

அடுக்களையே கதி என்றிருந்தவர்கள்
அடக்கு முறையை உடைத்து
கல்விச் சாலையில்
காலடி பதித்தனர்
அறிவில் சிறந்து
ஆற்றலில் உயர்ந்து நின்றாலும்
பழமைக் கோட்பாடுகளோ - இப்
பாவையரை விட்டு விலகவில்லை
மங்கையரை விலை பேசும்
மடமைத்தனம் ஒழியவில்லை
அடக்கத்துக்கு அணிகலனாகினின்று
அவனியை ஆளும் திறமை பெற்றிருந்தும்
சமுதாயச் சீர்கேட்டில்
சிக்கித் தவிக்கின்ற
தேசத்தின் சோதரிகளே!
தேசமெங்கும் எங்களுக்கின்று விழா!
விழாவெடுத்தால் மட்டும் போதாது - பெண்கள
விடிவுக்கு வழி சமைப்போம
கயமைத் தனங்களுக்கு
கண்ணீர் வடிக்காதீர்க
பழமைக் கோட்பாடுகளுக்கு
பயந்தொதுங்காதீர்கள்
இருபத்தோராவது நூற்றாண்டிலும்
இந்த இ னல்கள் வேண்டுமா? அலை
அடியோடு விரட்டுவோமின்று
அணைத்துப் பெண்களும் சேருங்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எழுந்திடுவோம!

இந்த மண்ணே தலை தாழ்த்தி
எமது மங்கையரைக் கௌரவித்து நிற்கிறது
களமாடும் மங்கையரைக்கௌரவித்து நிற்கிறது
ஆனால... மண்ணில் வாழ்வதற்கோ
மங்கை... தலைகுனிந்து நிற்கிறாள்
வேகம், விரைவு எதிலும் விரைந்து
சாதனை மலைகளைக் குவித்து நிற்பவள்
சமுதாயத்தின் முன்னே குனிந்து நிற்கிறாள்
வீதிகளில் துரத்துதல், விலை பேசுதலோடு
அடிமைத் தனங்களெல்லாம் அகன்றிடவேண்டும
அடக்கம்! அதுதான் அணங்கிற்கு அழகாம்
பாரதி பசர்ந்தான்! நிமிர்ந்த நடை
நேர் கொண்ட பார்வையென்றான்
அடக்கத்தோடுதான் புதுமைப் பெண்ணாயி
புரட்சி செய்தோம்! ஆனாலோ...
எமது சமுதாயத்தின் மனங்களிலோ...
இருள் நீங்கவில்லை
எமக்கு ஏமாற்றம் அதிகமாகத் தானுள்ளது
இருபத்தோராவது நூற்றாண்டோ கிட்டவருகிறது
சமராடும் மண்ணோ சுதந்திரத்தைப் பெறப்
போகிறது
நாமும் நிலத்தில் நிமிர்ந்திட வேண்டும்
சுதந்திர மண்ணில் நிமிர்ந்திட வேண்டும்
மார்ச் எட்டு! மகளிர் தினம்
மனித உள்ளங்களே உயர்ந்திடுவீர்
சீர்கேடுகளைக் களைய உதவிடுவீர்
சகோதரி ளே! நாம் எழுந்திடுவோம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழரசியே! சிம்மாசனத்தில் நிலைத்திடு.

துர்க்கா தேவித் தாயே!
தீயவர் சுற்றிநின்று தொலைப்போமென்று சொல்லி
வதைகள் பலவும் செய்து வாட்டினிற்கிறார்.
வீணரை யெதிர்த்துனிற்க வேண்டிய பலத்தை தந்து
வெற்றி கிடைக்கச் செய்து காத்தருள்வாயம்மா
திருமகளம்மா! செல்வத்துக்கு தாயே
தமிழர் நிலத்தில் இருப்பதென்ன?
வளம் குறைந்த மண்ணும் வயிறு காய்ந்த மக்களும்
வீடுகளையிழந்து வீதிகளில் நிற்கிறார்
இல்லிடம் கிடைத்திட இல்லாமை போகிட
எத்தர்கள் ஒழிந்திட இந்த மண் செழித்திட - எமது
கண்ணீர் துடைத்துக் காத்தருள்வாய்
கலைவாணியம்மா! குண்டு மழை பொழியவும்
கலைகளுக்கு விழாவெடுத்து கல்வியை
இறுக்கிப் பிடித்து
இருட்டில் தடவிப் படித்து
எத்தனை சாதனை ஏட்டில் பதித்தோம்
வல்லமை தந்தவுன் தாள் பணிந்தோம்
வாயாரப் போற்றித் துதிக்கின்றோம்
அன்னை பராசக்தியாகி அகிலத்தை ஆளும தாயே!
அவலங்கள் போக்கிடு, ஆறுதல் அளித்திடு
துட்டரைத் துரத்தி மண்ணைக் காத்திடு
தமிழரசியே! சிம்மாசனத்தில் நிலைத்திடு. ●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

114607

# ஆற்றலை அளித்திடு.

வீரத்தின் தெய்வமே!
வேள்வியொன்று நடக்குது
மக்களும் மனைகளும்
மறவர்களும் மா வேள்வியில்!
ஆர்ப்பரிக்கும் அரக்கர்களை
அடக்கிட வேண்டும்
வெற்றி நிலையாகிட
வேண்டுமின்னும் வீரம்
தந்திடு ஆற்றலை!

மீசாலையூர்க் கமலா 24 - 10 - 1994 உதயன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தரணியை எமக்காக்கிடு.
செல்வத்தின் தாயே!
சிதைப்போமென்பவரை
தலை குனிய வைத்து
தமிழ் மண்ணை
வளமாக்கி வைக்க
வல்லமை தருபவளே!
உனது மண்ணின் வளங்கள்
உணவளிக்க வைத்திட
தந்திடு ஆற்றலை!
தரணியைக் காத்திடு
கல்வித் தாயே!
காவிய மொருபுறம்
எழுதிக் கொண்டு
வீழும் உடலங்களையும்
வெட்டுப் புள்ளிகளையும்
தாண்டிக கொண்டு
தளராதுநிற்கும் - எம்
சாதனை மலைகள்
உயர்ந்திட வேண்டி
உன் தாள் பற்றிநிற்கின்றோம்
கலைவாணியம்மா!
ஆற்றலை அளித்திடு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணா! காத்திட வந்திடு.

நமது மண்ணைச் சுற்றி
நரகாசுரர்கள் வலம்
வகை வகையாக
வதைப்புக்களோ மிகப் பல
காத்தற் கடவுளே
கிருஷ்ண பரமாத்மா!
அதர்மம் ஓங்கும்போது
அவதாரம் என்றாய்
இந்த நிலத்திலே
அதர்ம ஆற்றில்
அவதிகள் கூறுகின்றோம்
நீயறியவில்லையா?
கொடியவரை எதிர்த்து
கருவிகள் கக்குகின்ற
ஒளிவீச்சுக்கள்
உனக்குத் தெரியவில்லையா?
அதைப் பார்த்தாவது
அவதாரம் எடுத்திடு
தீபாவளிப் பெருநாளிலும்
தமிழரின் மழலையர்
களத்திலேயே கண்ணா
காத்திட வந்திடு
எமது மண்ணின்
இடர்களைப் போக்கிடு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3729 ce

# நீண்ட தூரமில்லைத் திலீபா!

நல்லையில் நமக்குரிமை கேட்டு
நா வறளக் கிடந்த சோதரா!
கண்ணீர்க் கடலில் மூழ்கடித்து - தியாக
காவியத்தைப் பாட வைத்து
மக்களிதயங்களில் நிலையாகி
மரண தேவனையே திகைக்க வைத்து
வருகிறேன்! உன்னோடென்று சொல்லி
வானிருந்து விடிவைப் பார்க்கிறேனென்று கூறி
உடல் தளர்ந்த நிலையிலே
உதிர்த்துச் சென்ற வார்த்தைகளை
நினைத்துப் பார்க்கிறோம் திலீபா!
நீண்ட தூரமில்லை விடியலுக்கு
எல்லையை எட்டி விட்டோம் - தோழருடன்
எக்காளமிடும் நாள்
அண்மித்துக் கொண்டிருக்கிறது. ●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வந்து பாருங்கள்!

இந்த தேசத்துக்கு
எத்தனை துயரம்
இருந்தாலும்...
என்ன நடக்கவில்லை
அலுவலகங்களிலோ
அத்தனை வேலைகளையும்
ஊழியர்கள்
கச்சிதமாகக்
கவனித்தபடி!

பள்ளி மாணவரோ
பரணி இசைத்தபடியே
கற்றலிலும் கவனமாக!

பாட்டும் பரதமுமோ
பைந் தமிழுக்கு
வளம் சேர்க்கின்றன
மண்டபங்களை
நிறைத்துக் கொண்டு!

இலக்கியங்களுமோ
இந்த தேசத்தின்
அத்தனை கதைகளையும்

தேசிய நூலகப் பிரிவு
மாநகர நூலக சேவை
யாழ்ப்பாணம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொல்லிச் சொல்லியே
உயர்ச்சியின்
உச்சத்தில்!

வான் பூதங்களின்
வதைகளின் மத்தியிலும்
மிதி வண்டிகளை
உழக்கிக் கொண்டே
இந்த தேசத்தில்
என்ன நடக்கவில்லை!

கோவில் உற்சவங்களும்
கொண்டாட்டங்களும்
ஒரு புறம் நடக்க
எதிரியை மறவர்கள்
விரட்டியபடியேயிருக்க
இந்த தேசத்தில்
என்ன நடக்கவில்லை!

வந்து பாருங்கள்!
சிவந்த மண்ணில்
செப்பமாகவே
அனைத்திலும்
உயருகின்ற
எங்கள் தேசத்தை
வந்து பாருங்கள்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாதவம்

கவிஞர் கற்பனைக்கு
கருவாகி நின்று
சமுதாயத் தராசில்
சந்தைப் பொருளாகி
வீட்டுக்கு கிருகலட்சுமியாக
வீடு வீடாக ஏலம் போடப்பட்டு
சீ!தனம் என்னும்
ஆதனம் இன்மையால்
வசந்த காலத்தில்
வாழ்வைத் தவறவிட்டு
திருமண வைபவத்திற்கு
தீர்ப்புகள் வேண்டி
பலபேர் மத்தியில்
பவிசாக நின்று
படித்துப் பட்டம் பெற்று
பதவியிலிருந்தாலும்
கல்யாண விழாவிற்கு
காசு நோட்டால் தீர்ப்பாகி
இல்வாழ்க்கையில் - புக
இன்னல்படுவாள்!
மங்கையராகப் பிறப்பதற்கு
மாதவம் செய்ய வேண்டுமென்றான்
கவிஞன் இங்கோ...
மணமேடையேறுவதற்கும்
மங்கையர் மாதவம் செய்கின்றார் ●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நாயகியே! உனைப் போற்றுகின்றோம்.

வீரம், கல்வி, செல்வம்
வேண்டித் தொழும் நிலைபோய்
வையத்திலே வாட்டமுற்று
வருந்தித் தொழுகின்றோம்

வீரத்துக்குத் தாயே! துர்க்கை
வடிவில் நிற்பவளே - எமை
வீணர் வெட்டி வீழ்த்துகின்றார்
விரைந்து காக்க வேண்டுகின்றோம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செல்வத்துக் கதிபதியாகனின்று
ஜெகமெங்கும் அழகு கொழிக்க வைத்து
தேசத்தை காக்க வந்தவளே
தமிழ் மண்ணின் நிலை போக்க வேண்டுறோம்

தமிழர் வீடுகளில் கொலுவிருப்பவளே
திருமகளாகி தனங்கள் தருபவளே
தனங்களைத் "தீ" பற்ற வருகிறது
தடுத்துக் காக்க வேண்டுகிறோம்

கல்விக்கதிபதியாகனின்று
கலைவாணியெனப் பெயர் பெற்று
கலைகளையூட்டி வளர்ப்பவளே
கல்விச் சாலைகள் கருகாதிருக்க
வேண்டுகின்றோம்

அழியாத செல்வத்தை தருபவளே
ஆய கலைகளை அறிவித்தவளே
அருங்கல்விக் கூடங்களில் - அறிவு
அணையாதிருக்க வேண்டுகின்றோம்

நவமான தினங்களில் கூட
நாதியற்று நின்றாலும் - நாம்
நாயகியே! உனைப் போற்றுகின்றோம்
நல்லருள் வேண்டி நிற்கிறோம்.

# குடும்பம் மனம் பரப்பிட...!

குவலயத்தில்
குடும்ப உறவுகள்
எத்தனை! எத்தனை!!
கணவன், மனைவியாகி
கண்போல் காக்கும் அன்னையாகி
கருத்தோடு வளர்க்கும் தந்தையோடு
அருமை உடன் பிறப்பினரென்று
இந்த மண்ணுலகில் விரியும்
குடும்ப உறவுகள் எத்தனை!!!
பரந்து விரிந்து ள உறவுகளோ
பாசத்தோடு வளர்கின்றனவா?
இல்லை...யே குடும்பத்தில்
அத்தனை உறவும் (வினரும்)
பொறாமை, வஞ்சம், பணமென்று
பாசங்களை மிதித்து நிற்கின்றனர்
மிதிக்கப்படுவதால்த்தான்
மனைகளில்! குடும்ப உறவுகள்
நிம்மதியிழந்து நித்தமும்
நாட்டுப் போராட்டம் போல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீட்டிலும் போராட்டமாகி
விரோதிகளாகி நிற்கின்றனர்
''குடும்பம் ஒரு கதம்பம்''
ஆம்! கதம்பமாகி நீளும்
குடும்ப உறவுகள்
குவலயத்தில் மணம் பரப்ப
மனைகளில் ஒற்றுமை
மலிந்திட வேண்டும்
பொறாமை வஞ்சத்தைப்
பொசுக்கிட வேண்டும்
பணத்திலே மனிதர்
பாசம் வைப்பதை விட்டு
மனிதரில் பாசத்தை
வைத்திட வேண்டும்
உள்ளங்களும் உயர்ந்த
எண்ணங்களால் நிறைந்திடட்டும்
அப்படி குடும்ப உறவுகள்
வளர்க்கப்பட்டால்! கதம்பம்
வாடாது என்றும்
மணமுடையதாகி நிற்கும்
மனித உள்ளங்களே - அது
உங்கள் உள்ளங்களிலிருந்துதான்
எடுத்து வைக்கப்பட வேண்டும்
குடும்ப ஆண்டிலென்றாலும் - அதை
எடுத்து வையுங்கள்
குடும்பம் கதம்பமாகி, என்றும்
மணம் பரப்பி நிற்கும்.

114607



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஏனிந்த நிலையோ?

எங்களது தேசத்தில்
ஏனிந்த நிலையோ?
மயானத்திலா இருள் - எம்
மனதிலும் இருள்
ஆசைகளை ஒதுக்கி
அந்தரித்த நிலையில்
பச்சிளம் பாலகர் - நாம்
பரிதவித்துத் திரிகிறோம்
உள்ளத்தில் ஒளியில்லை
உதவிக்கு சிறு ஒளி பிடித்து
ஈழத்து வீதிகளில்
இருளகற்றித் திரிகிறோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கன்னியரே...! கன்னியரே...!

சீ,தனத்தால் சிறையிருக்கும்
சிறைப் பறவைகளே! திருமணச்
சபையேற - நீவிர் பெற்றோரை
சக்கை பிழிய வேண்டுமா?
கல்யாண விழாக் கோலத்திற்கு - நீர்
காசைக் கொட்டித்தான்
கதாநாயகியாக வேண்டுமென்றால்
காலமெல்லாம் கன்னியராகவே
கழித்திடுவீர்! ஏனென்றால்
கணவன் காசு கரைந்தவுடன்
கலைத்து விட்டால் -பெற்றோரின
காலடியில வந்து சரணடையும்போது
நீர், மீண்டும் கன்னியர்தான்! ●

மீசாலையூர் கமலா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சமத்துவம்

ஏழை, பணக்காரன்
என்ற பேதமின்றி
உயர்ந்தோர் தாழ்ந்தோர்
வித்தியாசமின்றி
கவலைகளைப் பகிர்ந்து
கண்ணீர் விட்டு
சமத்துவத்தை
சரியாக விளக்கும்
ஆலயம்தான்
ஆஸ்பத்திரி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வளங்கள் பெருகிட வைத்திடுவாயா?

குண்டு மழையிலும்
குளிரிலும் நடுங்கி
உதிரம் கொட்டி
உழைத்ததனால்
கதிரவன் —
கருணை செய்ய
கதிர் விளைந்தது
விளைச்சலைத் தந்த
வெய்யவனுக்கு
நன்றி செலுத்திட
பானையில் பால் விட்டு
பொங்கிப்
படைக்கின்றோம்
இன்னல்கள்
நிறைந்தாலும்
இதயங்கள்
நிறைந்திட வைத்த
கதிரவனே!
இந்த மண்ணின்
கண்ணீராறு வற்ற
மாற்றான்
தொலைந்திட
மகிழ்ச்சி நிலைத்திட
வளங்கள் பெருகிட
வைத்திடுவாயா?

மீசாலையூர் கமலா　　14 – 01 – 1993　　உதயன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தாயே களித்திடு

அன்னை பூபதி!
அமைதி காப்பதாகக் கூறி
அநியாயம் செய்தவரோடு
ஆகாரத்தைத் துறந்து
அகிம்சைப் போர் தொடுத்தாய்

பெற்றவள் மக்களுக்காகப்
போருக்கெழுந்திட்டால்
எந்தப் படைகளுக்கும்
மண்டியிட மாட்டாளென்று
மற்றைய தேசங்களுக்கும்
உணர்த்திச் சென்றாய்

தேரோடும் வீதியிலே
தங்க மகனை திலீபனை
அங்கம் உருக்கி
அமைதிப் படைகளைத்
திகைக்க வைத்து
எங்கள் நெஞ்சங்களில்
நிற்கிறான்

நீயோ...!
நாசப் படைகளை மட்டுமல்ல
நமது தேசத்து மக்களையும்
திகைக்க வைத்தாய்!
அதனால்த்தான்! எங்கள்
கடலும் தரையும்
காவியம் படைத்து மற்றைய
தேசங்களை வியக்க வைத்து
உன் எண்ணத்தைப்
பிடித்து நிற்கிறது
தேசம் நிலைக்கும்
தாயே! களித்திடு

37829CC



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரிவையர் நிமிர்ந்திட்டார்!

சகோதரர்களே! உமக்கு,
பெண்ணும் வேண்டும்,
பவுணும் வேண்டும்,
வீடு வளவென்று - சீர்
வரிசைகளாக...
இலட்சங்கள் வேண்டும்
வனிதையோடு வாழ்வதற்கு
இத்தனையுமா!
இவையெல்லாவற்றுக்கும்
எங்கே போவதென்று
ஏங்கி நின்றனர்!
பெண்களைப் பெற்றவர்
கடந்த நாட்களில்,
ஏந்திழையரும் ஏங்கினர்தான்,
அதுவும் கடந்த நாட்களில்தான்.
காதலித்து நின்றாலும்,
கற்றை நோட்டுக்களென்று
கண்ணீர் சொரிய வைத்தீர்,
ஆணாகப் பிறந்து விட்டதால்
அரிவையரைத் தாழ்த்தி
ஆட்டிப் படைத்தீர்,
அந்த நாட்களை - இனி
வரவிடமாட்டோமென்று
அரிவையர் நிமிர்ந்திட்டார்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்றைய நாட்களில்
பட்டங்கள் பெற்று
சட்டங்கள் இயற்றி
களத்திற்குச் சென்று,
எதிரியை விரட்டுபவர்கள்
இந்த மண்ணின் மங்கையர்.
இனியும் இவர்கள்...
பெற்றவரைப் பிழிந்து
தம்மையும் தாழ்த்தி
வாழும் வாழ்க்கைக்கு
தயாரில்லையாம்
இல்லாதவளும் இருப்பவளும்,
கைகோர்த்து நிற்கின்றனர்!
சீதன சீர் வரிசைகளை,
சாய்த்திடுவோமென்று
சோதரர்களே!
நமக்கிடையிலும் தர்க்கமா?
எதிலும் திறமை மிக்கவராய்
இணைந்து நின்று
பகைவரையே...
திக்கு முக்காடவைக்கிறோம்.
தமிழினத்தையே...
தலை குனிய வைக்கும்
இந்த இழிவான
சீதன சீர் வரிசைகளை
இணைந்தே துரத்துவோம்,
கௌரவமாக...வே,
கை கோர்த்திடுவோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சினமே வராதே!

சினமே! கிட்ட வராதே
மனதிற் குகந்தவர்களை
எட்ட செல்ல வைக்காதே

இதயமே! அதை
இருத்தி வைக்காதே
எலலோரும் எனை வெறுக்க
வைப்பதை வைக்காதே

சினமே! குருதியை
கொதிக்க வைக்காதே
நான் நிலந்தனில்
நெடுங்காலம் வாழ வேண்டும்
கொதிக்க வைக்காதே

உள்ளமே! அதை
உட்கார விடாதே
உன் சிந்தைக்குகந்தவரை
துரத்தி வைப்பதை
உட்கார விடாதே

சினமே! குடும்பங்களை
குலைத்து விடாதே
அவர்களின்......
மகிழ்ச்சி மாளிகையை
சிதைத்து விடாதே

சினமே! கிட்டவராதே
மனதிற்குகந்தவர்களை
எட்டச் செல்ல வைக்காதே

114607



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வேறு யாருக்குமல்ல!

வெண்ணெய் திரண்டு வர
தாழியை உடைக்க வந்தவர்க்கு
பசி, தாகம், உறுதி யென்று
அகிம்சையில் அமர்ந்து
வேடங்கள் குலைய வைத்த
திலிபா! மண்ணிலே
சாகாத சரித்திர மாகிவிட்டாய்!
வந்தவரும் வந்த வழியே!
விண்ணில வதிகின்றாயா?
இங்கே பார்!
''தமிழ்... ஈழம்'' என்று
உலகமே உச்சரிப்பதை!
உன் தலைவன் அடித்தடித்தே
தியாகமும் வீரமும் சாதனை மலையில்
அதனால்... நேசக் கரங்களும்
நீண்டு கொண்டிருக்கின்றது
தியாக தெய்வமே!
தேசமே! ஆராதிப்பது
வேறுயாருக்குமல்ல
· தமிழ்... ஈழம்''
உலகத்தவரால நிரந்தரமாய்
உச்சரிக்கப்பட ஆசிர்வதித்திடு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மா வீரரே! தெரிகிறதுதானே.

அடிமைத் தளையோடு
எத்தனை காலமென்று
மைந்தன் எழுந்தான்
விலை மதிப்பற்றது உயிர்
ஆனால் விடுதலையோ
உயிரினும் மேலானது
விடுதலை என்றான்
வரலாற்று நாயகமே!
நாம் வருகிறோம்
உயிரையே தருகிறோமென்று
சென்ற செல்வங்களே!
காற்றோடு கலந்து
எமது மூச்சாகிவிட்டீர்

3729C.C



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காயத்தைத்தான் கல்லறைக்குள்
வைத்து முடினோம்
கருத்துக்களோடு கருதியே
கார்த்திகை மாதத்திலே
மண்ணெங்கும் விழாவெடுத்து
வணங்க விரும்பினோம்
அதனால நாடெங்கும்
மாவீர ஆலயங்கள்
ஆலயங்களுக்காக தேசமே
அலங்கரிக்கப்பட்டு நிற்கிறது
தேசத்து அழகை
ஜீரணிக்க முடியாது
அழகு தேவதையே
திகைத்து நிற்கிறாள்
நாமோ ஆலயத்துள்
சூழ்ந்து நின்று
ஆராதித்து நிற்கிறோம்
கல்லறையருகினிலோ
ஒலியெழுப்பி ஒளியேற்றி
கண்ணீர்ப் பூச்சொரிந்து
கீதமிசைத்து நிற்கிறோம்
மா வீரரே! நாமிசைப்பது
என்னவென்று புரிகிறதுதானே!
''விடுதலை'' பெறாமல்
ஓயோமென்பது தெரிகிறதுதானே!

3729cc



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஸ்ரீசாலையூர் கமலா

கவிதை அறிவியலுமல்ல; அழகியற்கலையுமல்ல
இரண்டினதும் சமநிலைக் கலவை கொண்ட
சொல் - பொருள் ஓசை - ஒத்திசை - நடை
சுருக்கப் பொருத்தப்பாடு என்பன கலந்து
மனங்களிடையே அநுபவப் பரிமாற்றம்,
சிந்தனைக் கிளர்ச்சி என்பன செய்யப்
புறப்படும் கவிதையே.

கருமா சமுதாய மாற்றங்களினூடே
பெண்ணின விடுதலையையும் உரக்கப்
பிரகடனம் செய்கிறதென்றால் அது
இலக்கிய நியதிமட்டுமல்ல, வரலாற்று நியதி
யும் கூட
அந்த நிர்ப்பந்த நியதியின் நித்திய
தரிசனங்களாக ஸ்ரீசாலையூர் கமலா
வின் கவிதைகள் மலர்கின்றன

செம்பியன் செல்வன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org